நித்திய நித்தியமாய்
உம் பெயர் நிலைத்திருக்கும்
தலைமுறை தலைமுறைக்கும்
உம் புகழ் பேசப்படும் -2

நித்தியமே... சத்தியமே...
நிரந்தரம் நீர் தானையா -2

யாக்கோபை உமக்கென்று தெரிந்தெடுத்தீரே
இஸ்ரவேலை பிரித்தெடுத்து
துதிக்கச் செய்தீரே -2

வல்லவர் நீர் தானே...
பெரியவர் நீர் தானே... -2
நான் பாடும் பாடல் நீர் தானே
தினம் தேடும் தேடல் நீர் தானே -2

(நித்தியமே..)( நித்திய)

வானத்திலும் பூமியிலும்
உம் விருப்பம் செய்கின்றீர்
மேகங்கள் எழச் செய்து
மழை பொழிகின்றீர் -2
பெரியவர் நீர் தானே...
என் பிரியமும் நீர் தானே... -2

(நான் பாடும்) (நித்தியமே..)( நித்திய)

வார்த்தையினால் வானங்கள் தோன்றச் செய்தீரே
உம் சுவாசத்தினால்
விண்மீன்கள் மிளிர செய்தீரே -2
சகலமும் படைத்தவரே...
சர்வ வல்லவரே... -2

(நான் பாடும்) (நித்தியமே..)( நித்திய)